செய்தி வெளியீடு எண்: 640 நாள்:26.09.2019

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (26.9.2019) தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில், நாமக்கல், ஈரோடு, திருப்பூர், கரூர், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், தூத்துக்குடி மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டங்களில் 35 கோடியே 19 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 14 பாலங்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்கள். மேலும், ஈரோடு மாவட்டத்தில் 7 கோடியே 98 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள உயர்மட்டப் பாலத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மாநிலத்தின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியில் சாலை உள்கட்டமைப்பு வசதிகளின் முக்கியத்துவத்தினை உணர்ந்து, பெருகிவரும் போக்குவரத்து தேவைக்கேற்ப சாலைகளின் கொள்ளளவை அதிகரிக்கவும், பாதுகாப்பான பயணத்தினை உறுதிசெய்யவும், மாநிலம் முழுவதும் புதிய பாலங்களை கட்டுதல், தேவையான பகுதிகளில் தரமான சாலைகள்அமைத்தல், சாலைகள் மற்றும் பாலங்களை பராமரித்தல் போன்ற பணிகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், நாமக்கல் மாவட்டம், எருமப்பட்டி – வரகூர் சாலையில் எருமப்பட்டியில் 1 கோடியே 81 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் மற்றும் சங்ககிரி புறவழிச்சாலையில் பச்சாம்பாளையத்தில் 1 கோடியே 54 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; ஈரோடு மாவட்டம், கஸ்பாபேட்டை – கனகபுரம் சாலையில் பெரளிமேட்டில் 1 கோடியே 26 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; திருப்பூர் மாவட்டம், ஈரோடு – தாராபுரம் சாலையில் கருக்கம்பாளையத்தில் 4 கோடியே 94 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் மற்றும் பொள்ளாச்சி–தாராபுரம்–கரூர் சாலையில் மில்கேட்டில் 2 கோடியே 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; கரூர் மாவட்டம், மணப்பாறை – குஜிலியம்பாறை சாலையில் மேட்டூரில் 1 கோடியே 9 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; கோயம்புத்தூர் மாவட்டம், குமரன்குன்று – வெள்ளிக்குப்பம்பாளையம் சாலையில் சென்னம்பாளையத்தில் 2 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் மற்றும் போத்தனூர் – வெள்ளலூர் சாலையில் வெள்ளலூரில் 1 கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்; திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருமங்கலம்

அகலங்கநல்லூரை இணைக்க கூழையாற்றின் குறுக்கே 7 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், திண்டுக்கல் மாவட்டம் சக்கையநாயக்கனூர் – ஐங்கால்பட்டி சாலையில் ஐங்கால்பட்டியில் 1 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி – பிள்ளையார்நத்தம் சாலையில் வேலிடுபட்டியில் 1 கோடியே 21 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், கோட்டூரில் 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் மற்றும் பொட்டலூரரணி–மங்களகிரி சாலையில் பேரூரணியில் 1 கோடியே 85 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், தருமபுரி மாவட்டம், அம்மாணிமல்லாபுரம் – சந்திராபுரம் சாலையில் அம்மாணிமல்லாபுரத்தில் சின்னாற்றின் குறுக்கே 4 கோடியே 79 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்;

என மொத்தம் 35 கோடியே 19 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 14 பாலங்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

மேலும், ஈரோடு மாவட்டம், புளியம்பட்டி – பண்ணாரி சாலையில், பவானிசாகரில் பவானியாற்றின் குறுக்கே 7 கோடியே 98 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள உயர்மட்டப் பாலத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று அடிக்கல் நாட்டினார்கள்.

மேலும், சென்னை எல்லைச் சாலை திட்டத்திற்கான நிலயெடுப்புப் பணிகளை மேற்கொள்ளும் அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 35 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்ட 5 ஜீப்புகளை வழங்கிடும் விதமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று அவ்வாகனங்களின் சாவிகளை அவ்வலுவலர்களுக்கு வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.வெல்லமண்டி என்.நடராஜன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திருமதி எஸ்.வளர்மதி, தலைமைச் செயலாளர் திரு.க. சண்முகம், இ.ஆ.ப., நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை முதன்மைச் செயலாளர் திரு.எஸ்.கே. பிரபாகர், இ.ஆ.ப., சென்னை – கன்னியாகுமரி தொழிற்தட திட்ட இயக்குநர் (முழு கூடுதல் பொறுப்பு) டாக்டர் அருண் தம்புராஜ், இ.ஆ.ப., தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) திருமதி ந. சாந்தி, தலைமைப் பொறியாளர்

(நபார்டு மற்றும் கிராமச் சாலைகள்) திரு.எம்.கே. செல்வன், தலைமைப் பொறியாளர் (சென்னை – கன்னியாகுமரி தொழிற்தட திட்டம்) திரு.ஆர். சந்திரசேகர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**